

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் 23.11.2023 அன்று நடைபெற்ற விழாவில் ரூபாய் 1.21 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 11 கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, ரூபாய் 9.26 கோடி மதிப்பீட்டில் 67 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப்பேருரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மகளிர் திட்ட அலுவலர் ரமேஷ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.கங்காதாரணி, இலால்குடி ஒன்றியக்குழுத் தலைவர் தி.ரவிச்சந்திரன், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் ஆர்.முத்துச்செழியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெ.ரவிச்சந்திரன், ஆ.ராஜ்மோகன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் க.வைரமணி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் ரூ.37.22 இலட்சத்தில்

# மேம்படுத்தப்பட்ட ஆண்கள்-பெண்கள் உடற்பயிற்சிக் கூடங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.26-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் ரூபாய்.37.22 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் உடற்பயிற்சிக் கூடங்களைத் திறந்து வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இயங்கி வந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடங்களை புதுப்பித்திட வும் பழுதடைந்த தரைப்பலகை, மின் சாதனங்கள், கழிவறை சாதனங்கள், உடற்பயிற்சி உபகரணங்களை சீரமைத்து நவீனப்படுத்திடவும் மற்றும் கூடுதலாக டேபிள் டென்னிஸ் மேடை ஏற்படுத்திடவும் தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதனடிப்படையில் ஆண்கள் உடற்பயிற்சி கூடம் ரூபாய்.17.8 இலட்சம் மதிப்பீட்டிலும், பெண்கள் உடற்பயற்சி கூடம் ரூபாய்.14.58 இலட்சம் மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் உடற்பயிற்சி உபகரணங்கள் சீரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் பெண்கள் உடற்பயிற்சி கூடத்தில் புதிதாக டேபிள் டென்னிஸ் விளையாட வசதியாக டேபிள் டென்னிஸ் மேடை அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய். 4.84 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சி கூடங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம்(24.11.2023) திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் கு. வெங்கடேசன், செயலாளர் சு.ஹரிசங்கர், இணைச் செயலாளர் (பொது) இரா. லெனின், இணைச் செயலாளர் [வி (ம) ப] அ. ஜீவன் மற்றும் பொருளாளர் சே. பிரபா ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குடிமங்கலம் ஜெயராணி மஹாலில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கூட்டுறவு சங்கங்களுக்கு டிராக்டர்களை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சொ.சீனிவாசன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சா.ராஜமாணிக்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமை! அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னிலை! - திருச்சியில்

# தி.மு.க. மாநில வர்த்தக அணி சார்பில் கலை இலக்கிய நாடகத் திருவிழா!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - க.பொன்முடி நல உதவிகள் வழங்கி சிறப்புரை!

திருச்சி, நவ. 26-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி தி.மு.க. மாநில வர்த்தகர் அணி சார்பில் கலை இலக்கிய நாடகத் திருவிழா இன்று (26.11.2023 - ஞாயிறு) மாலை 4 மணியளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் கழக வர்த்தக அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமையில் நடைபெறுகிறது.

மாலை 4 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கும் இவ்விழாவில் மாலை 4.15 மணிக்கு திண்டுக்கல் சக்தி கலைக் குழுவினரின் தப்பாட்டம், கரகாட்டம், வில்லுப்பாட்டு போன்ற கிராமிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மாலை 5.15 மணிக்கு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் இயற்றிய நாடகம் 'சிலப்பதிகாரம்' - பேரா கி.பார்த்திபராஜா குழுவினரால் நடத்தப்படுகிறது.

மாலை 6 மணிக்கு தலைவர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உதித்த தீந்தமிழ் - திரையில் இருந்து மேடைக்கு ஒரு பயணம் பராசக்தி, மனோகரா திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுகிறது.

இரவு 7 மணிக்கு வாழ்த்துரையும் இரவு 7.45 மணிக்கு நலிவுற்ற கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகிறது.

விழாவில் பழஞ்சூர் கே.செல்வம் திருச்சி மண்டலம் விழாக் குழு அரசு கொறடா கோவி செழியன், புதுக்கோட்டை எம்.எஸ்.அசோக் பாண்டியன், வேப்பூர் வி.எஸ். பெரியசாமி ஆகியோர் வரவேற்கின்றனர்.

அமைச்சர்கள் அன்பில் மகேஷ்பொய்யாமொழி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.ரகுபதி, சா.சி. சிவசங்கர், செஞ்சி மஸ்தான், சிவ.வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் க.பொன்முடி ஆகியோர் கலந்துகொண்டு நல உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் சு.கல்யாணசுந்தரம், ந.தியாகராஜன், க.வைரமணி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கா.அண்ணாதுரை, குன்னம் சி.இராஜேந்திரன், பூண்டி க. கலைவாணன், நிவேதா எம்.முருகன், என்.கௌதமன், டி.உதயசூரியன் வசந்தம் கே.கார்த்திகேயன், கே.கே.செல்லபாண்டியன், நா.புகழேந்தி, கே.எஸ்.மூர்த்தி, மாலைராஜா, நா. முருகவேல், பி.டி.பாண்டிச் செல்வம், எஸ்.முத்துச் செல்வி, என்.தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், ஐ.கென்னடி, டி.ஆர்.முத்துசாமி, கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த.வனராஜ், வி.பி.மணி, இ.ராமர், க.தனசெல்வம், பெ.சுந்தரவரதன், வே.பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, பி.ஆர்.சிங்காரம், தி.திருமூர்த்தி, என்.செந்தமிழ்செல்வன், ஆர்.முருகன், வெங்கடேசன், சி.சுந்தரபாண்டியன், எஸ்.பாலமுருகன், ஆர்.ஆர்.குலோத்துங்கன், நந்தகோபால், எம்.ஆர். ரெங்கநாதன், ரமேஷ், கொண்டியார் க.செல்வராசு, வே.ரமேஷ், முத்து, கருப்பையா, சு.விஜயராகவன், எஸ்.வெங்கடேஷ், ப.பதம்சந்த் எஸ். செல்வம் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் வி.ஜெயன் நன்றி கூறுகிறார்.

திருப்பத்தூர் தொகுதி – சிங்கம்புணரி

# எஸ்.புதூரில் ரூ. 2.69 கோடியில் புதிய கட்டிடப்பணிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, நவ. 26 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி சிங்கம்புணரியில் புதிய பேரூராட்சிஅலுவலக கட்டிடம் ரூபாய் 1கோடி மதிப்பீட்டிலும், எஸ். புதூர் பாரிவள்ளல் ஒன்றியம் புழுதிப்பட்டியில் அரசு மேல்நிலைப்பள்ளியில் 8 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் ரூபாய் 1 கோடியே 69 லட்சத்திலும் ஆக மொத்த ரூபாய் 2 கோடியே 69 லட்சத்தில் பணிகள் நடைபெற உள்ளது.புதிய கட்டிடப் பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் திட்டப்பணிகளை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை கோட்டாட்சியர் எஸ்.பால்துரை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் பொன்மணி பாஸ்கரன், பொதுப்பணித் துறை செயற் பொறியாளர் செந்தில் குமார், வட்டாட்சியர் சாந்தி, பேரூராட்சி மன்ற தலைவர் அம்பல முத்து, துணை தலைவர் செந்தில் குமார், செயல் அலுவலர் சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் பூமணி, கே.பாலசுப்பிரமணியன், பி.செல்வராஜ், பேரூர் கழக செயலாளர் கதிர்வேலு, நிர்வாகிகள் சிவபுரிசேகர், புகழேந்தி, மனோகரன், குடோன்மணி, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள்.



கலைஞர் மண்டல பிரச்சார பயணக்குழுவினரை, கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சருமான சி.வெ.கணேசன், விருத்தாசலத்தில் வரவேற்று வாழ்த்துரை வழங்கினார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன், காட்டுக்கூடலூர் ஊராட்சியில் வரவேற்று வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ. பி.வி.பி.முத்துக்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ் குமார், இளைஞரணி பயண பொறுப்பாளர் க.முத்துக்குமார், நகர செயலாளர் க.தண்டபாணி,நகர மன்றத் தலைவர் சங்கவி முருகதாஸ், பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், பொதுக்குழு பொ.புகழேந்தி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில்

# திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணியினர் பெருமளவில் பங்கேற்பு!

## மாவட்டச் செயற்குழுவில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருப்பூர், நவ.26-

திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் திருப்பூர் ராஜாராராவ் வீதியில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் 24.11.2023 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன் தலைமையில், தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

25.11.2023, 26.11.2023 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல் சிறப்பு முகாம்களில் அதிக அளவில் புதிய வாக்காளர்களை பங்கு பெற செய்வது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

29.11.2023 அன்று புதுப்பாளையம் ஊராட்சி, வஞ்சிபாளையம் அருகில் தீரன் சின்னமலை மகளிர் கலை ளஅறிவியல் கல்லூரியை தமிழ்நாடு முதலமைச்சர், நம் கழகத் தலைவர் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் கழக உடன்பிறப்புகள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள்,மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொள்ள ஏற்பாடு செய்வது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

03.12.2023 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொடுவாய் விவேகானந்த வித்யாலயா பள்ளி அருகில் நடைபெற உள்ள இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கு பெறும் கூட்டத்தில் இளைஞர் அணியினரை திரட்டி கூட்டத்தை சிறப்புற செய்வது என இக்கூட்டத்தின் மூலம் தீரமானிக்கப்பட்டது. டிசம்பர் 17ம் நாள் சேலத்தில் நடக்கும் 2வது கழக இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு பெருந்திரளாக இளைஞர் அணியினரை திரட்டி செல்வது. பெரும் திரளாக கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்வது என்று இக்கூட்டத்தில்தீர்மானிக்கப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் திருப்பூர் வடக்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், தொழிற் சங்க நிர்வாகிகள் கழக தொண்டர்கள், முன்னாள், இந்நாள் மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து ஏற்பாடு செய்வது என இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# 12 தமிழக மீனவர்கள் சென்னை திரும்பினர்!

சென்னை, நவ. 26 -

இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களில், 3வது கட்டமாக 12 மீனவர்கள் இலங்கையிலிருந்து நேற்று முன்தினம் காலை சென்னை வந்தனர். தமிழ்நாட்டில் ராமேஸ்வரம், மண்டபம் கடல் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த, 64 தமிழ்நாடு மீனவர்களை இலங்கை கடற்படை கடந்த அக்டோபர் மாதத்தில் கைது செய்தது. இதையடுத்து, இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கை அரசு அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி, கடந்த சில நாட்களுக்கு முன்பு இலங்கை நீதிமன்றம் 63 மீனவர்களை விடுதலை செய்தது, இந்நிலையில் விடுதலை செய்யப்பட்ட 63 தமிழக மீனவர்களில், 15 பேர் கடந்த 21ம் தேதி விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து நேற்று முன்தினம் 15 பேர் விமானத்தில் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



தமிழக முதல்வர் – கழக தலைவர் ஆணைக்கிணங்க மதுரை மாநகர் மாவட்டக் கழக செயலாளர் கோ.தளபதி, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அறிவுறுத்தலின்படியும், மதுரை மாநகர் மாவட்டம் ஆரப்பாளையம் பகுதிக்கு உட்பட்ட 57 வது வட்டத்தைச் சேர்ந்த ஆனந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் சேமிப்பு முகாம் நடைபெற்றது. புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணி பொதுக்குழு உறுப்பினர் வைகை எம்.பரமன் தலைமையில், 1ஆம் பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ்.மாறன், 57வது வட்ட கழக செயலாளர் ஏ.சுரேஷ் முன்னிலையில் நடைபெற்றது. உடன் பகுதி கழக பொருளாளர் பி.டி.ஆர். கண்ணன் கார்த்திக், BLA 2 தேவி, BLA 2 துரைமணி, 57வது வட்ட தகவல் தொழில்நுட்ப செயலாளர் பால் பாண்டி, சரவணன் மற்றும் கழக தோழர்கள் பணி புரிந்தனர்.